ஸ்ரீ

கோபிகா விலாசம்.

இஃது

இடிகரை

வெங்கடராம நாயக்காவர்களால்

இயற்றப்பட்டு

கோயமுத்தூர்

அ்ஸர்வர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1890.

50-4-1890

3345

50
4-1890

ஸ்ரீ

கோபிகா விலாசம்.

ஆயர்மாதர்கள் சொல் தரு இம். முகாரி அடதாளம்.

பல்லவி.

ஆரோ தயிர் குடித்தானடி ஆயர் மடவாரே-இங்கே
அல்லோனையுங் காணோமே வல்லோனையு நீரே (ஆ

அநுபல்லவி.

எந்தவூரோயிந்தக்கள்ளன் எல்லோருமேபாரீர்-இப்போ
என்னசெய்திவர் மம்மமாரே எந்திழையே வாரீர் (ஆ

சரணங்கள்.

எந்தனிடவீட்டில்வெண்ணை எடுத்தான் சகிமாரே-இங்கு
எனறேயுந்தேடிக்காணேன் எந்திழைக்கண்ணிமாரே (ஆ
உந்தனிடவீட்டிற் கள்ளனுகந்து புகுந்தானே-நல்ல
வழியில்வெண்ணையிருடி யுண்டோனனோ தவோவாரீர்
மூர்த்தியெங்கள்வீட்டிற்பாலை முடித்தானடி வேறே-எங்க
முன்னோர்செய்த தீவினையோ-முருகன் செய்தானோ (ஆ
தீராவினை தீர்க்கவந்த திருமால்செய்ததுவோ-இந்தத்
தீவினைக்கென்னசெய்வோம் திருவினிசெய்தவாரோ (ஆ

விருத்தம்.

அன்னைமாரெல்லாங்கூடி ஆயிழைசோதைபக்கல்
உன்னிதமாகவந்துவுன் சுதன் செய்ததெல்லாம்
இன்னதுயென்றுசொல்லி யுரைக்கவுமேலாதென்று
சொன்ன வார்த்தைதனைக் கேட்டுசோதையுஞ் சொல்லு
வாளே

ஆயர்பெண்களுக்கும் அசோதைக்குந் தர்க்கம் தரு
இம். முகாரிமித்திரம் அடதாளம்.

கண்ணிகள்.

கோபியர்கள் சொல்லுதல்.

சோதையரே எங்களுடன் தீதுசெய்து உன்மகனும்
நீதிகெடுத் தெங்களையும் பேதகமா எங்களோடே
சூதுவாதுஞ் செய்தனல்லடி — எங்களோடே
தீதுமேதுஞ் சொன்னனல்லடி

யசோதை சொல்லுதல்.

என்னவடி வாயர்களே சின்னமகனை தூங்குறுண்டி
சொன்ன சொல்களேயுமக்கு விண்ணமடியுங்களுக்கு
முன்னனேயிலென்னை நீங்கிறேன் — பாலகனும்
வர்ணத்தொட்டிற் தன்னில் தூங்கிறேன்

கோபியர்.

எங்களிடபால்தயிலை இங்கிதமாய்த்தான்குடித்து (ர்த்து
மங்கையர்கள் தன்னைக்கண்டு பொங்கிமலர்தான் சொரி
பங்கமுள்ள வார்த்தைபேசிறான் — எங்களிட
கொங்கைமீதிற் கையைவீசிறான்
மங்கையரே யென்மகனும் எங்கள் வீட்டிலேயிருக்க[மோ
துங்கமில்லா வார்த்தைகளை யெங்குமமாடிச்சொல்லலா
வங்கிவாதம் பேசக்கிட்டுமோ — உங்களிட
கொங்கைகள் பிடிக்கவெட்டுமோ

கோபியர்

ஒட்டுத்திண்ணை தன்னிலேறி சட்டிகளைத் தானுடைத்து
கட்டித்தயிர்தான்குடித்து அட்டியில்லா தாடுறானே
இஷ்டமாகத் தான்குடித்தானே — எங்களுக்கு
கஷ்டம்வர வேகெடுத்தானே

யசோதை (யிருக்க

எந்தன்வீட்டில் பால் தயிர்கள் சொந்த வெண்ணெ யெய்
உந்தன்வீட்டி லென்மகனும்வந்து தின்றதென்னடி சொல்
எந்தன்மடி தன்னை நீங்கிறன் பாலகனும்
விச்சைதயாகத் தொட்டில் தூங்கிறன்

கோபியர்

கொண்டவன் மனைவியுடன் அண்டையிலிருந்தவனை
மண்டலமாம் பாம்பைவிட்டு ஒண்டியாயெரித்து போ
புண்டரீகக் கண்ணனடி னென்—எங்களுடன் [ருன்
கொண்டல்நிகர் வண்ணனடி னென்

அசோதை

அடுக்கிருந்தாலென்மகனும் படுத்திருந்தான பாலகனும்
கடுத்த விஷப்பாம்புகளை அடுத்துவிட்டெரதானோ,
எடுத்தெடுத்துச் சொல்லலாகுமோ—பாலகன்மேல்
பழித்துப்படித்து விள்ளலாகுமோ

ஸ்ரீகிருஷ்ணதேவருக்கும் யசோதைக்கும் தர்க்கம்

யசோதை கண்ணிகள் சாமா சாப்பு.

என்னையா கிருஷ்ண என் சுதனே நீ
ஆயர் மாதர் வீடு சென்றயோ
உன்னதமாகவே மாதர்கள் சொல்கின்ற
உண்மையைக் கேட்டாயோ வென்மகனே.

கிருஷ்ணன் இந்துஸ்தான் காபி ஏகதாளம்.

நானே சிறுவயது
நாயகிமார் தனனுடனே
விநோதையாகவே
வேடிக்கைச்செய்வதற்கு

என்ன அறிவேனம்மா—என்னம்மணி
ஆ என்னம்மணி ஓ என்னம்மணி
இளமை வயதிலேதான்

யசோதை.

ஒன்று மறிந்திலேன் என்றுசொல்லி கண்ணா
உண்மை யுரைத்திட வஞ்சுகிறாய்
அன்னிய மாதரை தீண்டுவ துனக்கு
அடுக்குமோ சொல்லுவாய் பாலகனே

கிருஷ்ணன்.

பால் குடிக்கும் பாலகனை
பாவைமார் தங்களுடன்
புல்லியிருந்தாயென்று
புரட்டுகளாய் பேசுகிறாய்
உனக்கிது அடுக்குமா—என்னம்மணி
ஆ என்னம்மணி ஓ என்னம்மணி
உள்ளதைச் சொல்வேனம்மா.

அசோதை (ஷாயகிங்) எனனும் இந்துஸ்தான் மெட்டு.

ரஞ்சிதமாகவே வஞ்சியர் தனனுடன்
அஞ்சாமல் விளையாடலாமோயா [ரஞ்
நீணிலம் புகழ்கின்ற நேசமேயன்றோ
நியாயமோ உனக்கிது சொல்லடா [ரஞ்
உனக்கிதுநியாயமோ மண்ணையுண்டவனே
உரைத்திடுவுண்மையையென்சுதனே [ரஞ்

கிருஷ்ணன் இம் காபி அடதாளம். (இந்திரசபாமெட்டு)

இக்குசெய்யுங் கோபியர்கள் வார்த்தை கேட்டுமே—
அம்மணி
அக்கம்பக்கம் நீயுமெனனைப் பேசலாகுமோ (இங்

11/7/58

ஒன்றுந் தெரியாப் பாலகன்மேல் ஓரஞ்சொல்லாதே—
என்னசொன்னாலும் கேளாமல் வையலாகுமோ (திங்

யசோதை—இம். குல்ரோஜ் ரூபகதாளம்.

பாலகனே கோபியர்கள் பொய்யுரைப்பரோ
ஓலமிட்டே யோடிவந்து சூதுசெய்வரோ (பா
உண்மையது சொல்லாவிடில் கோபம்பொங்கியே
தண்டிப்பேன்பிரம்பதனாலுன்னையோங்கியே (பா

கிருஷ்ணன்

ஞாலத்திலே யென்னையெவருஞ் சிறுவனென்றுதான்—
அம்மணி
கோலமுடனுரைப்பார்கள் உண்மையாகவே (ஞா
ஆயர் மாதர்தங்களின்—வார்த்தை கேட்காதே அம்மணி
நியாயமாக வென்னை நீயும் ஆதரிப்பாயே (ஞா

கொபியர் கங்கைக்குப் போகிற தரு லாவணி இராகம்
சங்கராபரணம் ஆதிதாளம்.

திங்கிலாதஆயர் நீங்கிடாதெழுனே சென்றார்-அங்கே
தீர்க்கமானபொருள் ஏற்கையாகக்கொண்டு
மார்க்கமாக எல்லோர் நின்றார்—அவர்சென்றார்
மங்கைமார்களெல்லாம் எங்களோடேநீர்வாரும்-கங்கை
மகிமைபெற்றுமுயர் தகமைமுற்றுமதின்
தகமும்விட்டு நீர் சேரும்—கரையேறும்
தோகைமார்களெல்லாம் பூகமானமொழிபேசி-நல்ல
தொந்தமானமொழி பந்தயங்களொடு
விந்தைஆயர்களும் பேசி—கைவீசி
அடுத்து ஆயர்களும் உடுத்து சேலைகளை வைத்தார் நல்ல
ஆடும்புனலிலவர் கூடுங்கைகள்பற்றி
நாடிப்பிடித்தும்பலம் பார்த்தார்—உடல்யேர்த்தார்

4

விருத்தம்.

ஆயரிடபெண்களெல்லாங் கூட்டஞ்சேர்ந்து
யமுனைநதிக் கரைதனிலே ஆடிச்செல்ல
தூயசில வாடைமட்டுந் தரித்துக்கொண்டு
துலங்கியவ ரெல்லோருங் கரையில் நின்று
நேயமதா யாடையெல்லாம் மேட்டில்வைத்து
நேயமுடன் கங்கைதனி லாடும்போது
மாயமதாய்க் கிருஷ்ணனுந்தான் துகிலெடுத்து
மரந்தனிலே கொம்புதொறுங் கட்டினனே.

ச்செந்தவிட்டுத்தக்கேதான் எப்படிப் போவோமென்று
ங்கைதகள்கலங்கித்தானே ஸ்ரீசனுஞ்சிறுமைபெற்றார்
ங்கைதயாய்க்குழைத்தானே விமலனுமதுக்கண்டு
கந்தமாங்குழலாரெல்லாங் கண்ணனைத்தொழுகுவாரே
பெண்கள் சொல்தரு இம் முகாரி சாபுதாளம்.

பல்லவி.

கண்ணா நீயெனைமக்காருமையா கருணைசெய்து
கண்ணா நீயெனைமக்காருமையா

அனுபல்லவி.

ணனேகவலைகள் பண்ணுதேபெண்களோடே
ணராவிக்கைகக ளெண்ணுமலே தாரும் (கண்
ணமாக வெனையாளுவோனே-குருந்தமரத்தில்
கூரைகளெல்லாஞ் சூழுவோனே-கல்ல
ணையிலா தாடை ஈனுவோனே-இந்தவேளையில்
இடர்களைத் தீர்த்தாளுவோனே (கண்

பெண்கள் தரு இம் இந்துஸ்தானி அடதாளம்.

தேவதேவதேவமஹா தேவதேவனே
தேவதேவதேவமஹா தேவதேவனே (தே

அண்டபுவனம் ரண்டுமளந்து வுண்டமாயனே
[illegible]த் தண்டஞ்செய்து கொண்டதூயனே (
தட்டிச்சேலை [illegible]ரவிக்கை கட்டத்தாருமே
அட்டிகை[illegible] கொட்டிமணிகளெட்டித்தாருமே (
மறைந்துவந்து [illegible]தெடுத்து நிறைந்திருந்தோனே
தெரிந்துநாங்கள் வருந்திக்கொள்ளகுளத்திலிருந்தோனே
வாசுதேவ [illegible] நேசமானேனே
தேசரிலே ராஜ[illegible]நிசனேனே (தே

ஸ்ரீகிருஷ்ணதேவர் கோபியர்களைப்பார்த்து நீங்கள் என்பேரில் ஒரு கும்மிபாடினால் உங்களுடைய ஆடைகளைத் தருகிறே[illegible] கோபியர்கள் மகிழ்ந்து கும்மி பாடுகிற வி[illegible]

[illegible]கும்மித்தரு—பல்லவி.

ரா[illegible] ராமமாகு ராமராமராகு ராம ராம (ரா
[illegible]டி பெண்ணேனே கூடுங்கடி ராகம்
ஆனந்தக்கும்மியடியுங்கடி
ஆடம்பர தேடும்பதம் நாடும்வினை யாடுமவனை
ஆதிகோவிந்தனைப் போற்றுங்கடி (ராம
கண்ணன்விளையாடல் தன்னைத்துதித்திடும்
காரிழையோர்களுக்கிப்பொழுதே
கண்டோர்பிணி கொண்டோடுது விண்டோர்களுங்
கொண்டாடின காரணமாயோனைப் போற்றுங்கடி (ரா

ஸ்ரீகிருஷ்ணர் கோபியர் கும்மிபாடியதைக் கேட்டானந்தித்து ஆடையாபரணங்கள் ஈய்ந்துவிட கோபியர் தத்தம் ஆபரணங்களையணிந்து சந்தோஷத்துடன் வீடு சென்றனர்.

விரிவாய் கிருஷ்ணநாடகத்தில் பார்க்கலாம்.